மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வடக்கு தாலுகா, பரப்பளவிலும், மக்கள்தொகையிலும் பெருகியுள்ளது. இதைப் பிரித்து, பெரியநாயக்கன்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்கித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், சகோதரர் சொன்னதைப்போல அந்தந்தப் பகுதியிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். தகுதிக்கேற்றாற்போல அதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எந்தெந்தப் பகுதியில் செய்யலாம் என்பதையெல்லாம் நிதி நிலைமைக்கேற்றாற்போல அதை நாங்கள் செய்தும் கொடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

95—

குடியிருப்புகள்

***1636—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 12]

(அ) புதுக்கோட்டை நகராட்சி, 40—வது வார்டில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, வார்டு எண் 40—ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக இருக்கிற இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் சுயநிதித் திட்டத்தின் மூலமாகக் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பணியாற்றுவதற்கு எனக்கு நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞரணிச் செயலாளர் சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சின்னவர் அவர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை பூங்கா நகரிலுள்ள வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் வீடுகள் அகற்றப்பட்டு புதிய வீடுகள் கட்டும் நிலையில் தயாராக உள்ளன. இங்கு சுமார் 2½ ஏக்கர் இடம் உள்ளது. மேலும், இந்த இடம் மாவட்ட நீதிமன்றம், பேருந்து நிலையம், அதிகப்படியான அரசு அலுவலகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் இருக்கின்ற இடமாகும். எனவே, இந்த இடத்தை பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கிடைக்கும்படி வீட்டு வசதித் துறையின் சார்பில் வீடுகளை உடனடியாகக் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, வீட்டு வசதி வாரியம் அதற்கான திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. அதிலே 42 சென்ட் அறநிலையத் துறைக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அந்த இரண்டு இடங்களையும் சேர்த்துக் கட்டினால் அது சிறப்பாக வரும். இருந்தாலும், அது கிடைக்கவில்லையென்றாலும் தனிப்பட்ட முறையிலே வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே வீடுகள் கண்டிப்பாகக் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

முற்பகல் 10–10

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் 1½ ஏக்கர் மட்டுமே உள்ளது. ஆனால், வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக 2½ ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, அந்த 2½ ஏக்கர் நிலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 200 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர முடியும். ஏற்கெனவே 240 வீடுகள் கட்டுவதற்குண்டான அரசாணையை வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வழங்கியிருக்கிறார்கள். முதல் கட்டமாக 90 வீடுகளும், அடுத்த கட்டமாக 150 வீடுகளும் கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசாணை உள்ளது. எனவே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் மட்டுமே இந்தக் குடியிருப்புகளை உடனடியாகக் கட்டி மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே ஆலங்குளம் Housing unit–ல் தற்போது இருக்கின்ற 372 வீடுகளில், 186 வீடுகள் சேதமடைந்துள்ளன. எனவே, அந்த 186 வீடுகளையும், புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் இருக்கின்ற சத்தியமூர்த்தி Housing unit–ல் சேதமடைந்திருக்கும் அனைத்து வீடுகளையும் இடித்துவிட்டு, சுமார் 4 ஏக்கரில் இருக்கின்ற அந்த இடம் முழுவதையும் அரசுப் பணியாளர்கள் வசிக்கின்ற குடியிருப்புகளாகக் கட்டித் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, 40–வது வார்டிலே வாரியத்திற்குச் சொந்தமாக 2.53 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே, அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 42 சென்ட் நிலம் இருக்கிறது. இரண்டையும் சேர்த்துக் கட்டினால் அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படி இல்லையென்றாலும் 2.53 ஏக்கரிலே கண்டிப்பாகக் கட்டப்படும்.

அதேபோல, 36–வது வார்டிலே உள்ள சத்தியமூர்த்தி காலனியிலே 5.59 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அங்கே 162 வீடுகள் தற்போது இருக்கின்றன. அவற்றை இடிப்பதற்கான உத்தரவு இடப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நிலம் முழுவதிலும் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்படும். அதேபோல, ஆலங்குளத்தைப் பற்றிச் சொன்னார்கள். 372 வீடுகள் அங்கே தற்போது இருக்கின்றன. அதிலே, 144 வீடுகள் இடிக்கின்ற நிலையிலே இருக்கின்றன. அவற்றை இடிப்பதற்கான உத்தரவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் செயல்படுத்துகின்றபோது முழுமையான திட்டத்தை வகுத்து, தேவையான அளவிற்குக் கட்டடங்கள் அங்கே கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, அரூர், பாலக்கோடு ஆகிய பகுதிகளில் கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) கொடுத்த அடுக்குமாடிக் குடியிருப்புகளெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இதற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுக்கு சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சியில் வீட்டு வசதி வாரியத்தினுடைய குடியிருப்புகள்

கிட்டத்தட்ட 1,000 என்ற அளவிற்கு இருக்கின்றன. சுமார் 5,000 பேர் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அங்கு இடம் இருக்கிறது. ஆனால், மயானம் இல்லை. எனவே, அந்த இடத்திலே மயானம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு சேலத்தில் இருக்கின்ற அத்தனை அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். அங்கே பல இடங்களிலே குடியிருப்புகளை இடித்துக் கட்ட வேண்டிய ஒரு கட்டாயம்தான் இருக்கிறது. ஓர் இடத்திலே 116 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், 4, 5 ஆண்டுக் காலமாக பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், அங்கு யாரும் வாடகைக்கு வரவில்லை. அதற்கெல்லாம் என்ன மாற்று ஏற்பாடு என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.*

அதேபோல, நீங்கள் கேட்கின்ற அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் பக்கத்திலே மயானம் அமைப்பதற்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய இடம் இருந்தால் அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை

***1765—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவில் தக்காளிக்கான மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?